வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 301 of 2023

வழக்கு சாட்சி - PW8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தனராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | அழகிய நம்பி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.02.2026.

(1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம்எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் ).

<u>முதல் விசாரணை</u> :

1) நான் தற்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 04.07.2023 ஆம் தேதி காலை 7.00 மணியளவில் அவிநாசிபாளையம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அவிநாசிபாளையம் முதல் நிலைய காவலர் வடிவேல் என்பரால் அவிநாசிபாளைய காவல் நிலைய குற்ற எண் 236/2023 பரிவுகள் 457,380 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள்வேலுச்சாமி மற்றும் மைதீஸ் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ. 5 ஆகும்.**

2)சாட்சிகள் வள்ளியாத்தாள், பரஞ்ஜோதி, வினோதினி, மைதீஸ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 04.07.2023 ஆம்

தேதி காலை 9.30 மணியளவில் நாச்சி பாளையம் பிரிவு பஸ் ஸ்டாப் புதிய வாகன தனிக்கை செய்துக்கொண்டிருந்தபோது இரண்டு நபர்கள் இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தவர்களின் வாகனத்தை தடுத்து பிடித்து நிறுத்தி விசாரிக்க ஆனந்த் என்றும் மற்றொருவர் சொக்கலிங்கம் என்கிற டேவிட் என்றும் கூறினார். தொடர்ந்து விசாரிக்க கடந்த 02.07.2023 ஆம் தேதி 23.00 மணியளவில் அவிநாசிபாளையம் அருகில் உள்ள கோவில்பாளையத்தில் உள்ள ஒரு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று இரு சக்கர வாகனம் மற்றும் பணம், யுபிஎஸ் பேட்டரி ஆகியவற்றை திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை 04.07.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நாச்சிபாளையம் பஸ் ஸ்டாப் அருகில் வைத்து கைதிற்கான காரணம் கூறி கைது செய்தும், ஆனந்த் என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பூமிநாதன் மற்றும் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

3) ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆனந்திடம் இருந்த யமாகா இருசக்கர வாகனம் மற்றும் ரூ.500/- மேற்படி வழக்கு சொத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர். பின்னர் சொக்கலிங்கம் என்கிற டேவிட் என்பவரிடம் விசாரித்து அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த வாக்மூலத்தின் அடிப்படையில் சாட்சிகள் பூமிநாதன் மற்றும் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் Honda Activa வாகனம் மற்றும் யுபிஎஸ் பேட்டரி மற்றும் பல்லடம் காவல் நிலைய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட ரூ.3000/-த்தை ஆஜர் செய்தார் அதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். எதிரி ஆனந்த் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ.6** மற்றும் எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **ஆ.த.சா.அ. 7** ஆகும். கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே

**ஆ.த.சா.அ.8 மற்றும் 9** ஆகும். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த படிவம் 91 **ஆ.த.சா.அ.10** ஆகும். சாட்சிகள் ஈஸ்வரமூர்த்தி மற்றும் பூமிநாதனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் திரு. வடிவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து 06.07.2023 ஆம் தேதி எதிரிகள் மீது 457,380 இதசவில் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

1) நான் தயார் செய்ததாக சொல்லப்படும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படத்தில் கைப்பற்றகூடிய தடயங்கள் இல்லை என்றால் சரிதான். நான் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படத்தில் வீட்டின் பூட்டு மற்றும் பீரோவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததா என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிடவில்லை. அ.சா.1 புகார்தாரர் திருட்டுபோன பொருட்களின் ரசீது மற்றும் பொருட்களின் நிறம் மற்றும் நிறுவனத்தின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 3 வரையுள்ளவர்கள் குடும்ப உறுப்பினர்என்றாலும் பட்டியல் சாட்சிகள் 4 முதல் 7 வரை பக்கத்து வீட்டுகாரர்கள் என்றால் சரிதான்.

2) இவ்வழக்கில் காவல் உதவி என்பது வேறு பதவி காவல் ஆய்வாளர் என்பது வேறு பதவி என்றால் சரிதான். நான் தயார் செய்ததாக கூறும் ஆவணங்கள் அனைத்தும் காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சிறப்பு உதவி ஆய்வாளராக தான் இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வேறு நபர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது நான் அதில்கையொப்பம் மட்டும்

செய்ததால்தான் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சொன்ன நேரம் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடம் இருந்து எந்த பொருட்களும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நான் எத்தனை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றால் இரண்டு. நான்அன்றைய தினம் மூன்று கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததாக ஆவணங்களில் உள்ளது என்றால் அன்றைய தினம் பல்லடம்காவல் நிலையத்திற்கு ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன்மற்றும் அவிநாசிபாளையம் காவல் நிலையத்திற்கு இரண்டு கைப்பற்றுதல் மகசர் தயால் செய்தேன்.

3) நான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தததில் பணத்தின் தாள்களின் எண்ணிக்கை குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் கைப்பற்றியதாக கூறும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றுதல் மகசர் 3 என்று குறிப்பிட்டு பணம் ரூ. 3000 என்று மட்டும் குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்றொரு கைப்பற்றுதல் மகசர் 2 என்று குறிப்பிட்டு பணத்தின் தாள்களின் எண்களை எல்லாம் குறிப்பிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பல்லடம் காவல் நிலைய வழக்கில் இரண்டு கைப்பற்றுதல் மகசர் தனி தனியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது புலன் விசாரணை படி திருட்டுபோன ரூ.1800/- உண்டியலில் இருந்து திருட்டுபோனதாக இல்லை என்றால் இல்லை வீட்டின் பீரோவில் இருந்து எடுத்த பணம்.

4) வழக்கில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வழக்கு ஆவணங்களில் காவல் உதவி ஆய்வாளர் என்று கைப்பற்றுதல் மகசரில் காவல் ஆய்வாளர் என்றும் குறிப்பிடப்பட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளின் கையொப்பம் காவல் நிலையத்தில் கையொப்பமிட்டு

சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.02.17 18:42:30 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.